www.padippakam.com

# ஜேர்மன் வாழ் தமிழ் மக்களுக்கு, தமிழீழமக்கள் விடுதலைக்கழகத்தின் பின்தள மகாநாட்டை ஒட்டிய செய்தி.

எமது ஸ்தாபனத்தின் தளமகாநாட்டின் தீர்மானத்தை பின்பற்றி கழக பின்தள மகாநாடு தமிழ்நாட்டில் திருவாரூரில் நடைபெற்றது. இம்மகாநாடு 19.7.86.ல் நடைபெறுவதாக இருந்தும் தவிர்க்க முடியாத காரணங்களினால் 24.7.86 அன்றே தொடங்கியது. மகாநாட்டின் நோக்கத்தை நிறைவேற செய்ய விடாமலும் திறனாய்வு தற்திறனாய்வு ஆகியவற்றிற்கு முகம் கொடுக்க முடியாமலும் கோஷ்டி வாதத்தை முன்வைத்து சிலர் மகாநாட்டை புறக்கணித்தனர்.

இந்நிலையில் தள மகாநாட்டுத் தீர்மானத்தின்படி (2-3) 03 மாதங்களுக்குள் பதில் அனுப்பப்பட்டு அதனை ஏற்றுக்கொண்டு பின்தள மகாநாட்டுக்கு தளத்திலிருந்து ஒத்துழைப்பு குழுவாக பின்தளம் வந்த குழுவினர் தம்முள் பிளவுண்டு நின்றதால் மகாநாட்டிற்கு வருவதை தவிர்த்து மகாநாட்டு முடிவுகளை எதிர்பார்த்து ஒதுங்கி கொண்டனர். இக்காரணங்களால் மகாநாடு தொடர்ந்தும் பின்போடப்படாமல் உடன் நடத்தும்படி தோழர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பேராளர்கள் 80க்கும் அதிகமானோர் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்ததை தொடர்ந்து 24.7.86ல் மகாநாடு கூட்டப்பட்டது. இம்மகாநாட்டில் பேராளர்கள் 105 பேரும் வெளிநாட்டு கிளைகளிலிருந்து பார்வையாளர்களாக இருவரும் கலந்து கொண்டனர்.

மகாநாட்டை கூட்டுவதில் பல தடைகள் ஏற்பட்டாலும் மகாநாடு சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது. தள மகாநாட்டைப் போலவே இதுவும் பிரதானமாக அராஜகவாதம் தனிநபர்களின் ஆதிக்கம், தனிநபர் வழிபாடு கோஷ்டி வாதம் ஆகியனவற்றிற்கு எதிரானதாகவும் அவைகள் பற்றிய ஆய்வுகளையும் மேற்கொண்டதுடன் அவற்றை இல்லாதொழிப்பதற்கான வழி வகைகளையும் கண்டு கொண்டது. முன்னணி தோழர்களின் தன்னாய்வு திறனாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக தோழர் முகுந்தனின் தாராளவாத போக்கு கடுமையாக விமர்சிக்கப்பட்டதுடன் அவராலும் சுயவிமர்சன அடிப்படையில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்களாவன'

(1) 24.7.86 அன்று தம்மைத்தாமே தமிழீழமக்கள் விடுதலைக்கழகத்தின் உரிமையாளர் என்றும் தம்மால் தோழர்கள் முகுந்தன், வாசுதேவன், கண்ணன் ஆகிய மூன்று கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர்களும் ஏனைய சில மத்திய சபை உறுப்பினர்களும் கழகத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் கழக மத்திய சபை உறுப்பினராக இருந்து செயற்பாட்டுக்கள் நிறுத்தி வைக்கப்பட்ட தோழர்கள் ஈஸ்வரன், ராஜன், ஆதவன், செந்தில், பாபுஜீ, சேகர், அசோக், குமரன் ஆகியோர் அறிக்கை விட்டுள்ளது தொடர்பாகவும் அவர்களால் பின்தள மகாநாடு பற்றி அறிவிக்கப்பட்ட தகவல் தொடர்பாகவும் மகாநாடு பின்வருமாறு தீர்மானித்துள்ளது.

அ. கழகத்தின் தளமகாநாட்டுத் தீர்மானங்களை முற்றாக திரித்துக் கூறிய நிலையில் தோழர்கள் ஈஸ்வரன், ராஜன், அசோக், ஆதவன், பாபுஜீ, செந்தில், சேகர், குமரன் ஆகியோரது தீர்மானங்கள் அமைந்துள்ளதை இம்மகாநாடு கண்டிக்கின்றது. (தளத்தீர்மானம் 4.2, 4.3, 8.5, 8.6, 9.1, 9.3)

ஆ. தள மகாநாட்டு முடிவுகளை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்ட பின் தள மகாநாட்டை நிராகரித்து எவ்வித ஒத்துழைப்பும் வழங்காது குழப்பும் முயற்சிகளில் நியாயவாதிகளாக காட்டி தோழர்களையும் விரக்திக்குள்ளாக்கிய மேற்படி (அ)வில் காட்டிய மத்திய சபை உறுப்பினர்களின் நடவடிக்கைகளையும் இம்மகாநாடு கண்டிக்கின்றது.

இ. 24ந் திகதி தொடக்கம் நடந்து கொண்டிருக்கும் இம்மகாநாட்டிற்கு ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 50% க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டுள்ளார்கள் மொத்தம் 105



படிப்பகம்

www.padippakam.com

பேராளர்கள் கலந்துள்ள இம்மகாநாட்டில் 32 உளவுப்படையினர் மட்டும் கலந்து கொண்டிருப்பதாக தவறான தரவுகளை தந்து தோழர்களையும் மக்களையும் குழப்பத்துக்குள்ளாக்கிய மேற்படி மத்திய சபை உறுப்பினர்களை இம்மகாநாடு கண்டிக்கின்றது.

ஈ. இவற்றிற்கெல்லாம் மேலாக தாம் வெகு விரைவில் கழக மகாநாட்டை நடத்தவிருப்பதாக தெரிவிப்பதன் மூலம் தளத்தில் ஏற்கனவே நடைபெற்றபடி மகாநாட்டை முற்றாக நிராகரிப்பதை இம்மகாநாடு கண்டிக்கின்றது.

உ. கழக உயர் அங்கமான கட்டுப்பாட்டுக் குழுவால் நியமிக்கப்பட்ட மத்தியசபை உறுப்பினர்களான மேற்படி உறுப்பினர்கள் தமது கையில் கட்டுப்பாட்டுக் குழுவை நீக்கும் உரிமையை எடுத்துக்கொண்டு தள மகாநாட்டு தீர்மானங்களுக்கு மாறாக நடந்து கொண்டதையும் (தீர்மானம் 8.5 உறுதி செய்கின்றது) இம்மகாநாடு கண்டிக்கின்றது.

ஆகவே,

22.7.86 நாளிட்ட தனது கடிதத்தின் மூலம் கட்டுப்பாட்டுக்குழு மத்தியசபையின் செயற்பாடுகளை நிறுத்தி வைத்தமையும் இம்மகாநாடு நடைபெறுவதற்காக மகாநாட்டு ஏற்பாட்டுக்குழுவுக்கு அதிகாரம் கொடுத்தமையும் இம்மகாநாடு ஏற்றுக் கொண்டுள்ளது.

24ந்திகதி மகாநாடு ஆரம்பித்தும் மத்திய சபை உறுப்பினர்கள் அனைவரும் தமது பதவிகளை இழந்துள்ளனர். இந்நிலையில் தாபனத்திற்கான உரிமைகோர கழக மகாநாடுவரை கட்டுப்பாட்டுக்குழுவுக்கே உரிமையுள்ளது என்பதையும் மகாநாடு வலியுறுத்துகின்றது. அதேவேளை தனிநபர்களுக்கு, குழுக்களுக்கு, தாபனத்திற்கோ அல்லது ஸ்தாபனத்தின் உடமைகள், இலட்சனை முதலியவற்றிற்கோ உரிமைகோர முடியாது என்று இந்த மகாநாடு பிரகடனம் செய்கின்றது.

இதே வேளை மேற்படி உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட குற்றங்கள் யாவும் இம்மகாநாட்டில் ஆராயப்படும் எனவும் குற்றவாளிகள் விசாரிக்கப்படவேண்டில் இம்மகாநாட்டில் நியமிக்கப்படும் விசாரணைக்குழு விசாரித்து கழகத்திற்கு அறிக்கை தரப்படவேண்டு' என்று மகாநாடு ஏற்றுள்ளது.

நடைபெற்றுக்கொண்டிருக்கும் இம்மகாநாட்டை நடாத்துவதற்கு ஏற்பட்ட சிக்கல்கள் பின்னடைவுகளுக்கு யார் காரணம் என்று கண்டு பிடித்து தெரிவிக்க பொதுவான விசாரணைக்கமிஷன் ஒன்று நடுநிலையானவர்களைக் கொண்டு அமைக்கப்படவேண்டும் என்றும் விசாரணைக்கமிஷனில் தளம், பின்தளம் ஏற்கக்கூடிய நடுநிலையானவர்கள் இருக்க வேண்டும் எனவும், இம்முடிவுகள் கழக தோழர்கள் பொதுமக்கள் மத்தியில் தெரிவிக்கப்படவேண்டும் எனவும் மகாநாடு ஏற்றுள்ளது.

(2) அ. தாபனத்தின் கடந்தகால தவறுகளுக்கு தாபனத்தின் அதி உயர் அங்கமான கட்டுப்பாட்டுக்குழுவும் அதனால் நியமிக்கப்பட்ட மத்திய சபையுமே கூட்டு பொறுப்பு ஏற்கவேண்டும்.

ஆ. கடந்தகால தவறுகள் மீதான 'குற்றத்தை எந்த ஒரு தனிநபர் மீதும் சுமத்திவிடும் உரிமை கட்டுப்பாட்டுக்குழுவுக்கோ, மத்திய குழுவிற்கோ வேறு எவருக்குமோ கிடையாது. பின்தளப் பொதுச்சபையால் அமைக்கப்படும் விசாரணைக்குழுவே இதை தீர்மானிக்கும்.

(3) பேராதுரைஅப்பன்னையார், சிவனேஸ்வரன் அகிலன், செல்வன், சந்ததியார் மற்றும் மாற்று இயக்கத்தவர் உட்பட 41 ~~கொலைகள்~~ மரணங்கள் மகாநாட்டில் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது சம்பந்தமான விபரங்கள் உடன் மக்களுக்கு தெரியப்படுத்தாமைக்கு மத்திய ஸ்தாபனம் கண்டிக்கப்பட்டதுடன் இக்கொலைகள் சம்பந்தமான விசாரணைக்குழு முடிவுகள் வெளிவந்ததும் உறவினர்களுக்கும் மக்களுக்கும் விபரங்கள் அறிவிக்கப்படும்.

(4) கழகத்தில் அங்கம் வகித்த உளவுத்துறையின் அராஜகவாத நடவடிக்கைகள் கழகத்தின் இன்றைய நிலைக்கு காரணம் என்பதை மகாநாடு ஏற்றுக்கொண்டது. உளவுத்துறையினரின் நடவடிக்கைகள் பற்றிய விசாரணைக்குழுவின் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள், தண்டனைகள்



படிப்பகம்

www.padippakam.com

பற்றி பின்தள பொதுச்சபை தீர்மானிக்கும். விசாரணைகள் முடிவடையும்வரை கடந்தகாலத்தில் உளவுப்பிரிவில் அங்கம் வகித்தோர் எந்தவித பொறுப்புகளும் வகிப்பது தவிர்க்கப்பட்டு ஏனைய தோழர்களுடன் முகாம்களில் இருக்கவேண்டும்.

(5) கடந்தகாலத்தில் கழகத்தினுல் செய்யப்பட்ட உட்கொலைகள் உட்பட சகல குற்றச்சாட்டுகளையும் விசாரணை செய்ய விசாரணைக்குழு ஒன்று பின்தள பொதுச்சபையால் அமைக்கப்படும் விசாரணைக்குழுவின் செயற்பாட்டிற்கு தளநிர்வாகத்தின் ஆலோசனை பெறப்படும். விசாரணைக்குழுவின் விசாரணைகளுக்கு கழகத்தின் அனைத்து அங்ககங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். விசாரணைக்குழுவில் கடந்தகாலத்தில் பொறுப்புகளில் இருந்தவர்களோ, அன்றி குற்றச்சாட்டுகளில் தொடர்புடையவர்களென கருதப்படுபவர்களோ அங்கம் வகிக்க முடியாது. கடந்தகால குற்றங்கள் தொடர்பாக எவராயினும் விசாரணைக்குழுவிற்கு தகவல் கொடுக்க விரும்பினுல் அதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

(6) ஐக்கியம் தொடர்பாக மற்ற இயக்கங்களுடன் கடந்தகாலங்களில் உளச்சுத்தியுடன் கழகம் ஈடுபடவில்லை என்பதையும் மகாநாடு ஏற்றுக்கொண்டதுடன் எதிர்காலத்தில் ஐக்கியம் தொடர்பான விடயங்களை கவனிக்க குழு ஒன்றும் நியமிக்கப்படும்.

(7) உட்கட்சி ஜனநாயகமின்மையாலும் தனிநபர் ஆதிக்கத்தினுலும், கடந்தகால அராஜகவாத போக்கினுலும் கழகத்திலிருந்து வெளியேறிய தீப்பொறி உட்பட அனைத்து முற்போக்கு சக்திகளையும் இணைப்பதற்கு இணைப்பக்குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவின் சிபார்சுக்கமைய அவர்களை உடன் விமர்சன சுயவிமர்சன அடிப்படையில் இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

(8) இராணுவ தந்திரோபாயமும் மீளாய்வு செய்யப்பட்டு தற்போதைய நிலை புவியியல் அமைப்பு ஆகியனவற்றை கவனத்தில் கொண்டு விஞ்ஞான பூர்வமான முறையில் மாற்று உத்திகள் மேற்கொள்ளப்படுவதுடன் எல்லைப்புறங்களில் வாழும் மக்களுக்கு தற்பாதுகாப்பு வழங்ககக்கூடியவிதத்தில் முழுமையான செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டு உடன் அமுல்படுத்தப்படவேண்டும்.

(9) மலையக மக்களுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவதுடன் அவர்களின் போராட்டத்திற்கு ஊக்கம் கொடுக்கும் நோக்குடன் வேலைத்திட்டங்கள் உடனடியாக உருவாக்கப்படவேண்டும்.

(10) அ. மகாநாட்டில் 29 பேர் கொண்ட பொதுச்சபை தெரிவு செய்யப்பட்டதுடன் இப்பொதுச்சபையினுல் தெரிவு செய்யப்படும் 9பேர் கொண்ட தற்காலிக செயற்குழுவே பின்தள நிர்வாகத்தை நிர்வகிக்கும். பின்தள நிர்வாக செயளர் ஒருவரையும் தற்காலிக செயற்குழு தெரிவு செய்யும்.

ஆ. கலைக்கப்பட்ட மத்திய சபைக்கு புதிலாக 9பேர் கொண்ட தற்கரலிக மத்தியசபை ஒன்று அமைக்கப்படும். கழக மகாநாடு (தளம்-பின்தளம்) வரை சர்வதேச உறவு, ஆயுதக்கொள்வனவு தவிர்ந்த நிதி உட்பட அனைத்து நிர்வாகத்தையும் தற்காலிக மத்திய சபையே நிர்வகிக்கும். இத்தற்காலிக மத்திய சபை கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் நால்வருடன் (ஒருவர் சிறையில்) தளத்திலிருந்து மூவரும் பின்தளத்திலிருந்து இருவரும் தெரிவு செய்யப்படுவர்.

இ. தற்போதைய கட்டுப்பாட்டுக்குழுவில் உள்ள மூவரில் இருவர் சுழற்சி முறையில் தளத்தில் இருந்து செயற்படவேண்டும்.

<u>பொதுத்தீர்மானங்கள்</u>

இம்மகாநாட்டை திறம்பட நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

தென்கிழக்காசிய அரசியல் சூழ்நிலையை புரிந்து கொண்டு தமிழீழ விடுதலை இயக்கங்களை இங்கிருந்து இயங்க அனுமதியளித்த இந்திய அரசுக்கு இம்மகாநாடு தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

தமிழீழமக்களின் விடுதலை உணர்வைப் புரிந்து கொண்டு முதன்முதலில் நடைமுறை உதவியளித்த பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும், அதன் தலைவர் தோழர் யாசீர் அரபாத்திற்கும் இம்மகாநாடு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

தமிழீழமக்கள் விடுதலைக்கழகத்திற்கு அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் ஒத்துழைப்பு வழங்கும் பி.எப்.எல்.பிக்கும் அதன் தலைவர் தோழர் ஜோர்ஜ் கபாசுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

உழைக்கும் பாட்டாளி மக்களின் விடுதலையை வென்றெடுக்கும் மார்க்சிச லெனினிச அடிப்படையை ஏற்றுக் கொண்டு செயற்படும் சர்வதேச புரட்சியாளர்கள் அனைவருக்கும் எமது தார்மீக ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிம்பாவேயில் நடைபெறும் அணிசேரா நாடுகள் மகாநாட்டுக்கு எமது வாழ்த்தை தெரிவித்துக் கொள்கிறோம் .நசுக்கப்படும் கறுப்பின மக்களுக்கும் மற்றும் உலகிலுள்ள ஒடுக்கப்படும் மக்களுக்கும் இம்மகாநாடு உந்து சக்தியாக உதவவேண்டும் என்று ஆசி கூறுவதோடு வரப்போகும் புதிய தலைவர் திரு.றொபேட் முகாபே அவர்களுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் பின்தளத்தில் வந்து தங்கியிருந்து எமது விடுதலைக்கு வேண்டிய தயாரிப்புகளை செய்வதற்கு எமக்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய தமிழக மக்களுக்கும் தமிழக அரசுக்கும் மற்றும் தமிழக அரசியல் கட்சிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தாபனத்தின் அமைப்பு ரீதியான தலைமையை வரவேற்று ஆதரவளித்த மொரிசியஸ் பிரதமர் திரு.அன்ரு ஜெகந்நாதன், அமைச்சர் பரசுராமன் ஆகியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது நியாயப்பூர்வமான போராட்டத்தை உணர்ந்து தம்மால் முடிந்த வரையில் எமக்கு ஆதரவளித்துவரும் சிறிலங்கா முற்போக்கு சக்திகளுக்கும் நாம் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

<u>தமிழீழமக்களுக்கு</u>

புரட்சிகர போராட்ட அனுபவ முயற்சி இல்லாத காரணத்தாலும் அகபுற சூழ்நிலைகளிலுள்ள ஆதிக்க சக்திகளின் தலையீடு காரணமாகவும் ஏற்பட்ட பின்னடைவுகளையும் தவறுகளையும் படிப்பினையாக எடுத்துக் கொண்டு தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல நீங்களே எமது வழிகாட்டிகளாகவும், உந்து சக்திகளாகவும் விளங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

வெகு விரைவில் மகாநாட்டு விபரங்கள் முழுமையாக உங்கள் கைகளுக்கு கிடைக்க ஆவன செய்வோம் என உறுதியளிக்கின்றோம்.

நன்றி.

"அனைத்து, அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்."

தொடர்புகளுக்கு,
புனரமைப்புக்குழு சார்பில்

S. JEGANATHAN
MÜHL STR-11
7100-HEIL.BRONN
BÖCKINGEN
T.P. 07131-30722.

வெளியீடு, புனரமைப்புக்குழு
தமிழீழமக்கள் விடுதலைக்கழகம்
மேற்கு ஜேர்மன் கிளை.
20.8.86



படிப்பகம்